# முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No - 9/2020

Date: 18.11.2025 PW.1 (லெட்சுமணபெருமாள்)

**1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

இந்த வழக்கிற்கான விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். என் மனைவி சொல்லி சொன்னோ என்றால் இல்லை. நான் இந்த தாவா சொத்தைப்பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டுள்ளவாறு பிரதிவாதிகளும் அவர்களுக்குரிய பங்கை Counter Claim மூலம் தனியாக கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு ஓட்டு வீடு, கூரை வீடு, காம்பவுண்ட் சுவருடன் சேர்ந்து மொத்த விஸ்தீரணம் 24 செண்ட் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்து சம்பந்தமாக நடந்த வேறு வழக்கில் செலவு தொகை கோரி பிரதிவாதிகளுக்கு நான் அறிவிப்பு அனுப்பியதற்கு அவர்களும் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்பு தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே காரைக்குடி உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா சொத்தைப்பொறுத்து மு.வா.எண்.33/2010 என்ற வழக்கை காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் இந்த தாவா வழக்கில் உள்ள 1-ம் பிரதிவாதி இந்திராணி மற்றும் 4-ம் பிரதிவாதி சோமசுந்தரம் மீது தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் தாவா சொத்து காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு உரிமையானது என்று கேட்ட பரிகாரத்திற்கு எதிராக 14.11.2018-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மேல்முறையீடு செய்தார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ரசீது கொடுத்த வழக்கறிஞர் திரு.முத்துராமன் என்னுடைய வழக்கறிஞர் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களில் A.N.முத்துராமன் வழக்கறிஞர் தாவா வழக்கில் 1, 4 பிரதிவாதிகளுக்கு வழக்கு எண் மு.வா.எண்.33/2010 என்ற வழக்கில் ஆஜராகியுள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களுக்கு பிறகு சுமார் 4 மாதம் கழித்து 06.03.2019 அன்று வா.சா.ஆ.5 ரசீதை வழக்கறிஞர் A.N.முத்துராமன் அவர்களிடமிருந்து நான்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.18 17:49:56 +0530

பெற்றேன் என்றால் சரிதான். நான் வருமானவரித்துறையில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே நடைபெற்ற வழக்கு நடவடிக்கையில் பிரதிவாதிகள் தான் செலவு செய்தார்கள் என்றும், நான் எந்த செலவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 5 ஆவணம் என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5-ல் வழக்கறிஞர் சீல் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கோரியுள்ளபடி பிரதிவாதிகள் எனக்கு எந்த தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆவணங்களை பொய்யாக தயார் செய்து பொய்யான தகவல்களின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.18 17:50:02 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**